வருவாய் பற்றி கேட்டார்கள். வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 5 லட்சம் ரூபாய்-4 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய்-என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல் இதுவரை உள்ள உபரி நிதியிலிருந்து ஏறத்தாழ 7 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வங்கியில் இருப்பாக இருக்கிறது.

9–45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைசாமி அவர்கள் ஆஞ்சநேயர் கோயிலிலே அசையும் சொத்து எவ்வளவு, அசையாச் சொத்து எவ்வளவு இருக்கிறது என்று கேட்டார்கள். அசையும் சொத்து அங்கே வந்து போகின்ற பக்தர்கள்: அசையாச் சொத்து ஆஞ்சநேயர் (சிரிப்பு).

நியாயவிலைக் கடைகள்

*996—திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நியாய விலைக் கடைகளில் நுகர்வோர் விரும்பாத சில பொருட்களையும் வாங்கியாக வேண்டுமென்ற நிபந்தனை மாநிலத்தின் பல பகுதிகளில் அமுலாக்கப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நியாய விலைக் கடைகளில் நுகர்வோர் விரும்பாத எந்தப் பொருளையும் கட்டாயப்படுத்தி நுகர்வோர்களுக்குக் கண்டிப்பாக விநியோகம் செய்யக்கூடாதென்று தெளிவாக அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடத்தக் கூடிய கடைகளில் அல்லாத கோ-ஆப்பரேடிவ் ஸ்டோர்ஸ் கடைகள் அதாவது சிந்தாமணி, அமராவதி போன்று நடத்தக்கூடிய கடைகளில், உணவுப் பொருட்களை வாங்கவேண்டுமென்று சென்றால், அந்தக் கடைகளில் மோசமான சோப்பு, அதாவது துணிகளையே கிழித்துவிடக்கூடிய அளவிற்கு உள்ள சோப்பு,

1990 ஏப்ரல் 24]

உளுத்துப்போன பருப்பு போன்றவற்றையெல்லாம் கட்டாயமாக வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். 'பிச்சை எடுத்ததாம் பெருமாளு, அதைப் பிடுங்கியதாம் அனுமாரு' என்ற ஒரு பழமொழி இருக்கிறது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நாமக்கல் அனுமாரா? (சிரிப்பு).

திருமதி பாப்பா உமாநாத் : ஆகவே, கஷ்டப்பட்டு அரிசி வாங்க வருகிறார்கள் என்று சொன்னால், அவர்களிடம் இது போன்ற பொருட்களை வாங்கச் சொல்லும்போது, ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் சில இடங்களில், அத்தியாவசியப் பண்டங்கள் தவிர்த்து மற்ற பொருள்கள் விற்பனை செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட தற்குக் காரணம்—அவையெல்லாம் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தாலே — ஓரளவிற்கு நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக. ஆகவே, அப்படிப்பட்ட அனுமதி வழங்கப் பட்டது. ஆனாலும்கூட நுகர்வோர்கள் விரும்பாத கட்டத்தில் அந்தப் பொருட்களை வலுக்கட்டாயமாக வாங்கச் சொல்லக் கூடாது என்று அவ்வப்போது கூட்டுறவுத் துறையின் சார்பாக சுற்றறிக்கைகள் விடப்பட்டுள்ளன. 31—10—1988 ஆம் தேதி 14—2—1989 ஆம் தேதி ஆகிய தேதிகளில் கூட்டுறவுத்துறை யின் சார்பாக, நுகர்வோர்களைக் கட்டாயப்படுத்தி, அத்தியா வசியப் பண்டங்களைத் தவிர, மற்ற பொருட்களை, கட்டாயமாக வாங்கவேண்டுமென்று பணிக்கக்கூடாது என்று சுற்றறிக்கைகள் விடப்பட்டுள்ளன. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எங்காவது அந்தக் குறைபாடுகள் இருக்குமேயானால் தனிப்பட்ட முறையிலே, எழுத்து மூலமாக தெரிவிப்பார்களே யானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியவாறு 3 முறை, 4 முறை உத்தரவு போட்டும் அமல்படுத்தப்படவில்லை என்பது அறிய முடிகிறது. ஆகவே, அந்த உத்தரவை அச்சிட்டு அல்லது மக்களுக்குப் புரியக் கூடிய முறையில் ஒவ்வொரு கடைக் கும் முன்னாலே ஒட்டி வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது புகார்கள் வருகின்றபொழுது அவைகளைச் சரியாக அலுவலர்கள் கடைப்பிடிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்கவும் அவர்கள் தொடர்ந்து அந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகவும் சுற்றறிக்கைகள் அவ்வப்போது விடப்படுகின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த ஆலோசனையையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் பொருள்களைப் பெற முடியாத நிலையில், ஏழையெளிய மக்கள், மத்திய தரக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் பலருக்கு ரேஷன் கார்டுகள் கிடைக்காமல் இருக்கின்றன. எனவே, அவர்களுக்கெல்லாம் விரைவிலே புதிய ரேஷன் கார்டுகள் எப்போது கிடைக்கும் என்பதை அரசு அறிவிக்குமா என்றும் அதைப்போலவே, அரிசி, பாம் ஆயில், மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருள்கள், ஏற்கெனவே, இந்திரா காங்கிரஸ் ஆட்சியின்போது அளவு குறைக்கப்பட்ட காரணத்தினாலே கிடைக்கவில்லை. இப்போது புதிதாக பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற மத்திய அரசு அவைகளையெல்லாம் சரியாக வழங்கி இருக்கிறதா ? அதில் ஏதேனும் வெட்டு இருக்கிறதா ? ஒழுங்காக அவை தரப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குடும்ப அட்டைகள் இல்லாதவர்களுக்கு 100 சதவீத பரிசோதனைக்குப் பின்னாலே அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று சொல்லி 16—3—1990 ஆம் நாள் அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட குடும்ப அட்டைகள் யாருக்காவது வேண்டுமேயானால் அவர்கள் முறைப்படி விநியோக அதிகாரியிடம் மனு செய்து, இந்தப் பரிசோதனைக்கு உட்பட்டு குடும்ப அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இன்னொரு வினாவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பினார்கள். மத்திய அரசு இப்போது வழங்குகின்ற அரிசியின் அளவு உயர்த்தப்பட்டு இருக்கிறது. பாம் ஆயிலைப் பொறுத்தமட்டில் அது இன்றைக்கு 1,250 மெட்ரிக் டன்னாக இருந்து 2 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெயைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த அளவு குறையாமல் 3 காலமாகப் பிரித்து இப்போது மத்திய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 24]

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரேஷன் கார்டுகள் வழங்குவதில் அரசு இப்போது புதிதாக ஒரு உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக அறிகிறேன். புதிய கார்டுகள் வழங்கப்படுவதற்கு முன்பாக அந்தப் பகுதியில் 10 பழைய கார்டுகளைத் திரும்பப் பெற்றால், 5 கார்டுகள்தான் வழங்கப்படுவதாக அறிகிறேன். அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9—50 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நிர்வாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அறிவுரை. அதைப்பற்றி தாங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் தொகுதியில் உள்ளவர்கள் யாருக்காவது குடும்ப அட்டை தேவைப்படுமானால் உரிய அதிகாரிகளிடம் சென்று மனு அளித்து, விவரங்களைச் சொல்லி புதிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்டக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

* 2160—திரு. என். பெரியசாமி :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிதம்பரனார் மாவட்டத்தில் மாவட்டக் கூட்டுறவு வங்கி அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. என். பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலிருந்து வ.உ.சி. மாவட்டம் பிரிக்கப்பட்டு நான்காண்டுகளாகியும், இதுவரைக்கும் அங்கே மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப்படாமல் இருக்கிறது. அதை அமைக்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலே உள்ள மத்திய வங்கி நலிந்த வங்கியாக தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சித்துறை வங்கியால் கருதப்பட்டு, இப்போது புனர் அமைப்புத் திட்டத்தின் கீழ் இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் கால கட்டத்தில் அதை இரண்டாகப் பிரித்து தூத்துக்குடியை தலைநகராகக் கொண்ட